Tamil Nadu Election Watch

# ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கத்தின் (ADR) 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் குறித்த அறிக்கையின் சுருக்கம்:

## உச்ச நீதிமன்ற மற்றும் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள்

குற்றப் பின்னணி கொண்ட வேட்பாளர்களைக் கட்சிகள் தேர்ந்தெடுப்பது தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் (25 செப்டம்பர் 2018 மற்றும் 13 பிப்ரவரி 2020) மற்றும் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்கள்:

- அரசியல் கட்சிகள் தங்கள் இணையதளங்களில் குற்றப் பின்னணி உள்ள வேட்பாளர்களின் வழக்குகள், குற்றத்தின் தன்மை போன்ற முழு விவரங்களையும் கட்டாயம் பதிவேற்ற வேண்டும்.
- குற்றப் பின்னணி இல்லாத மற்ற நபர்களை விடுத்து, இவர்களை ஏன் தேர்ந்தெடுத்தோம் என்பதற்கான காரணங்களை தகுதி மற்றும் சாதனைகள் அடிப்படையில் விளக்க வேண்டும் (வெற்றி வாய்ப்பை மட்டும் காரணமாகக் கூறக்கூடாது).
- இந்த விவரங்களை ஒரு உள்ளூர் மொழிப் பத்திரிகை, ஒரு தேசியப் பத்திரிகை மற்றும் சமூக வலைதளங்களில் (Facebook & Twitter) வேட்பாளர் தேர்வான 48 மணி நேரத்திற்குள் வெளியிட வேண்டும்.
- வேட்பாளர்கள் தங்களுக்கு எதிரான குற்ற வழக்குகளை தடிமனான எழுத்துக்களில் (Bold) தேர்தல் ஆணையப் படிவத்தில் குறிப்பிட வேண்டும். கட்சிகள் இதை மீறினால் நீதிமன்ற அவமதிப்பாகக் கருதப்படும்.

## சுருக்கம் மற்றும் முக்கிய சிறப்பம்சங்கள்

ஜனநாயக சீர்திருத்த சங்கமும், தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பு என்ற சுமார் 1200 உறுப்பினர்களைகொண்ட தேசிய பிரச்சாரமும் தேர்தல் சீர்திருத்தம், ஜனநாயக மேம்பாடு, ஆளுகையில் மேம்பாடு ஆகிய துறைகளில் பணியாற்றி வருகின்றன. இதன் அங்கமான தமிழ்நாடு தேர்தல் கண்காணிப்பகம் 2011, 2014, 2016, 2019, 2021, 2024 ஆகிய தேர்தல்களில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தாக்கல் செய்த பிரமாண பத்திரங்களை ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டது.

இப்போது 2026 தேர்தல் வேட்பாளர்களின் விபரங்களையும் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளது. முடிவுகள் பின் வருமாறு:

- 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் 4023 வேட்பாளர்களில் 3992 பேரின் சுய உறுதிமொழிப் பத்திரங்களை தமிழ்நாடு தேர்தல் கண்காணிப்பகம் ஆய்வு செய்துள்ளது.

| Party | Total Contesting Candidates | Total Contesting Candidates Analysed | Candidates with declared Criminal Cases | % of candidates with declared criminal cases | Candidates with declared serious criminal cases | % of candidates with declared serious criminal cases | No. of Crorepatis | Percentage of Crorepati Candidates |
|---|---|---|---|---|---|---|---|---|
| National Parties | 185 | 184 | 34 | 18% | 14 | 8% | 61 | 33% |
| State Parties | 640 | 637 | 268 | 42% | 139 | 22% | 435 | 68% |
| Registered Unrecognized Party | 990 | 979 | 258 | 26% | 148 | 15% | 304 | 31% |
| Independent | 2208 | 2192 | 162 | 7% | 103 | 5% | 181 | 8% |
| **Total** | **4023** | **3992** | **722** | **18%** | **404** | **10%** | **981** | **25%** |

- இவர்களில் 722 பேர் (18%) குற்றப் பின்னணி உள்ளவர்கள்; 404 பேர் (10%) கடுமையான குற்றப் பின்னணி உள்ளவர்கள் என்று தங்களது பிரமாணப் பத்திரங்களில் தெரிவித்துள்ளனர்.

- 981 வேட்பாளர்கள் (25%) கோடீஸ்வரர்கள் ஆவர்.

## ஆய்வு செய்யப்படாத வேட்பாளர்கள்

மொத்தம் 31 வேட்பாளர்களின் பிரமாணப் பத்திரங்கள் சரியாக ஸ்கேன் செய்யப்படாததாலோ அல்லது முழுமையாகப் பதிவேற்றப்படாததாலோ ஆய்வு செய்யப்படவில்லை. (பட்டியலில் டாக்டர் கே. கிருஷ்ணசாமி, டாக்டர் டி. அருண்குமார் உள்ளிட்டோர் அடங்குவர்).

## குற்றவியல் பின்னணி

- **ஒப்பீடு:** 2021-ல் 13% ஆக இருந்த குற்றப் பின்னணி வேட்பாளர்களின் எண்ணிக்கை 2026 தேர்தலில் 18% ஆக அதிகரித்துள்ளது.
- **கட்சி வாரியாக குற்றப் பின்னணி சதவீதம்:**
- அதிமுக - 69%,
- காங்கிரஸ் - 50%,

- பாமக - 50%,
- பாஜக - 48%,
- தமிழக வெற்றிக் கழகம் (TVK) - 40%,
- திமுக - 40%,
- நாம் தமிழர் கட்சி - 25%.

- **கடுமையான குற்றங்கள்:** கொலை வழக்குகள் உள்ளவர்கள் (13 பேர்), கொலை முயற்சி வழக்குகள் உள்ளவர்கள் (44 பேர்), பெண்களுக்கு எதிரான குற்றங்கள் கொண்டவர்கள் (18 பேர்).

- **கட்சி வாரியாக தீவிர குற்றவியல் வழக்குகள் உள்ள வேட்பாளர்கள்:** முக்கிய கட்சிகளில், பகுப்பாய்வு செய்யப்பட்ட வேட்பாளர்களில்,

- அதிமுகவின் 170 பேரில் 60 (35%) பேர்,
- பாட்டாளி மக்கள் கட்சியின் 18 பேரில் 6 (33%) பேர்,
- பாஜகவின் 33 பேரில் 9 (27%) பேர்,
- தமிழக வெற்றிக் கழகத்தின் 231 பேரில் 43 (19%) பேர்,
- திமுகவின் 175 பேரில் 32 (18%) பேர்,
- இந்திய தேசிய காங்கிரஸின் 28 பேரில் 5 (18%) பேர்,
- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (CPI) 5 பேரில் 1 (20%) பேர் மற்றும்
- தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் 10 பேரில் 1 (10%) பேர் தங்களுக்கு எதிராக தீவிர குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாகத் தங்கள் சுய பிரமாணப் பத்திரங்களில் தெரிவித்துள்ளனர்.
- **விளைவின்மை:** உச்ச நீதிமன்ற உத்தரவுகள் இருந்தபோதிலும், அரசியல் கட்சிகள் தொடர்ந்து குற்றப் பின்னணி உள்ளவர்களுக்கு வாய்ப்பளிப்பது மாறவில்லை என ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் (ADR) கடுமையாக விமர்சித்துள்ளது. வெற்றி வாய்ப்பை மட்டுமே கருத்தில் கொண்டு கிரிமினல் வேட்பாளர்களைக் கட்சிகள் நிறுத்துகின்றன.

**நிதிப் பின்னணி**

- **பில்லியனர்கள் (ரூ. 100 கோடிக்கு மேல் சொத்துள்ளவர்கள்):** 22 வேட்பாளர்கள் (0.55%) பில்லியனர்கள். கட்சி வாரியாக: தமிழக வெற்றிக் கழகம் (8 பேர்), திமுக (7 பேர்), அதிமுக (3 பேர்), காங்கிரஸ் (2 பேர்).
- **கோடீஸ்வரர்கள்:** மொத்தம் 981 வேட்பாளர்கள் (25%) கோடீஸ்வரர்கள்.
- **சராசரி சொத்து மதிப்பு:** இந்தத் தேர்தலில் வேட்பாளரின் சராசரி சொத்து மதிப்பு ரூ. 5.17 கோடியாகும்.
- கட்சி வாரியாக சராசரி சொத்து:
- அதிமுக (ரூ. 53 கோடி),
- காங்கிரஸ் (ரூ. 27 கோடி),
- திமுக (ரூ. 21 கோடி),
- தமிழக வெற்றிக் கழகம் (ரூ. 16 கோடி),
- பாமக (ரூ. 15 கோடி),
- பாஜக (ரூ. 14 கோடி).
- **அதிக சொத்து உள்ள முதல் 3 வேட்பாளர்கள்:**

1. லீமாரோஸ் மார்ட்டின் (அதிமுக) - ரூ. 5863 கோடி
2. ச. ஜோசப் விஜய் (த.வெ.க) - ரூ. 648 கோடி
3. ஆதவ் அர்ஜுனா (த.வெ.க) - ரூ. 534 கோடி

- **அதிக கடன் உள்ள வேட்பாளர்கள்:**
- லீமாரோஸ் மார்ட்டின் (ரூ. 340 கோடி+),
- கார்த்திக் மோகன் (திமுக, ரூ. 144 கோடி+)
- கே.ஆர். ஜெயராம் (அதிமுக, ரூ. 77 கோடி+)

- **அதிக வருமானம் தாக்கல் செய்தவர்கள் (ITR):**
- ச. ஜோசப் விஜய் (ரூ. 184 கோடி),
- லீமாரோஸ் மார்ட்டின் (ரூ. 40 கோடி),
- ஆதவ் அர்ஜுனா (ரூ. 17 கோடி).

**பிற பின்னணி விவரங்கள் (கல்வி, வயது, பாலினம்)**

- **கல்வி:**
- 43% வேட்பாளர்கள் 5 முதல் 12 ஆம் வகுப்பு வரையில் படித்தவர்கள்
- 46% பேர் பட்டதாரிகள்.
- 95 பேர் கல்வியறிவு பெறாதவர்கள்.
- **வயது:**
- 36% பேர் 25-40 வயதுக்குட்பட்டவர்கள்;
- 51% பேர் 41-60 வயதுக்குட்பட்டவர்கள்.
- **பாலினம்:**
- மொத்தம் 442 (11%) பெண் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.
- கட்சி வாரியாக பெண்களுக்கு வாய்ப்பளித்த சதவீதம்:
- நாம் தமிழர் கட்சி (50%),
- பாமக (17%),
- அதிமுக (12%),
- திமுக (11%).
- தமிழக வெற்றிக் கழகம் (10%),
- காங்கிரஸ் (7%)

**ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கத்தின் (ADR) பரிந்துரைகள்**

- கொலை, பாலியல் வன்கொடுமை, கடத்தல் போன்ற கடுமையான குற்றங்களில் தண்டனை பெற்றவர்களை நிரந்தரமாகத் தேர்தலில் போட்டியிடத் தடை செய்ய வேண்டும்.
- குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டவர்களைத் தகுதிநீக்கம் செய்ய வேண்டும்.
- குற்றப் பின்னணி உள்ளவர்களுக்கு வாய்ப்பளிக்கும் கட்சிகளின் வரி விலக்கை ரத்து செய்ய வேண்டும்.

- அரசியல் கட்சிகளை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (RTI) கீழ் கொண்டு வர வேண்டும்.
- தேர்தல் ஆணையப் படிவத்தில் (Form 26) தவறான தகவல்களை அளிக்கும் வேட்பாளர்களைத் தகுதி நீக்கம் செய்ய வேண்டும்.
- **NOTA (நோட்டா):** ஒரு தொகுதியில் நோட்டாவுக்கு அதிக வாக்குகள் கிடைத்தால், அங்குள்ள அனைத்து வேட்பாளர்களையும் தள்ளுபடி செய்துவிட்டு மறுதேர்தல் நடத்த வேண்டும். அந்த மறுதேர்தலில் பழைய வேட்பாளர்கள் மீண்டும் போட்டியிட அனுமதிக்கக் கூடாது.


பெ. ஜோசப் விக்டர் ராஜ்<br>
ஒருங்கிணைப்பாளர்<br>
**தமிழ்நாடு** தேர்தல் கண்காணிப்பகம்<br>
9486086938